


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 151 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 25 – வியாழக்கிழமை 09 ஜனவரி 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 151 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 25 - Thursday 09 January 2025 - Madurai 12 Pages ₹ 5.00


## மலிவான அரசியல் செய்யும் அ.தி.மு.க.வின் பொல்லாத ஆட்சிக்குப் பொள்ளாச்சியே சாட்சி!

## சென்னையில் பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் இந்த அரசு துரித நடவடிக்கை!

# 60 நாட்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2025) சட்டமன்றப் பேரவையில், சென்னை மாணவி வழக்கு தொடர்பாக கொண்டு வரப்பட்ட கவனஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்தார்.

**சென்னை, ஜன. 9 -**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சென்னையில் பல்கலைக்கழக மாணவி ஒருவர்மீது நடைபெற்ற பாலியல் வன்கொடுமை தொடர்பாக கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்பு தீர்மானம் மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பதிலுரை வருமாறு:-.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பல்கலைக்கழகத்தினுடைய பெயரைச் சொல்லி நீங்களெல்லாம் பேசியிருக்கிறீர்கள். ஆனால், நான் அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயரைச் சொல்லி, அந்தப் பெயருக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால், எங்களையெல்லாம் ஆளாக்கியவர் அவர். அந்த உணர்வோடு, அந்தப் பெயரைத் தவிர்த்து, இங்கே பதிலளிக்க விரும்புகிறேன்.

**பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சட்டப்படி நியாயம் கிடைக்கும்!**

சென்னையில் ஒரு மாணவி மீது நடத்தப்பட்டிருக்கக்கூடிய பாலியல் வன்கொடுமை என்பது மாபெரும் கொடூரம். அதை யாராலும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இதுகுறித்து, இந்த அவையிலே நம்முடைய உறுப்பினர்கள் ஜெகன்மூர்த்தி, வேல்முருகன், ரா.ஈஸ்வரன், சதன் திருமலைக்குமார், மாரிமுத்து, நாகைமாலி, சிந்தனைச் செல்வன், எம்.ஆர்.காந்தி, ஜி.கே.மணி, கு.செல்வப்பெருந்தகை, உதயகுமார் ஆகியோர் கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துப் பேசி இருக்கிறீர்கள். இதுகுறித்து உண்மையான அக்கறையோடு பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறீர்கள். இதைப் பயன்படுத்தி இந்த ஆட்சியின் மீது தவறான எண்ணத்தை உருவாக்குவதற்காகவும் சில உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். சிலர் அல்ல; ஒரு உறுப்பினர் பேசியிருக்கிறார். யாருக்கு எந்த நோக்கம் இருந்தாலும், பாதிக்கப்பட்ட பெண் பக்கம் நின்று, அவருக்கு சட்டப்படி நியாயம் பெற்றுத் தரக்கூடிய காரியத்தைத் தவிர, தமிழ்நாடு அரசுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதைத் தெளிவாக, உறுதியாக, ஆணித்தரமாக முதலிலேயே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குற்றம் நடந்த பிறகு, ஒருவேளை குற்றவாளியை உடனடியாகக் கைது செய்யாமல் விட்டிருந்தாலோ அல்லது குற்றவாளியை காப்பாற்ற முடிவு செய்திருந்தாலோ அரசை நீங்கள் குறை சொல்லலாம். ஆனால், சில மணிநேரத்துக்குள் குற்றவாளியை கைது செய்தபிறகும், குற்றம் சம்பந்தப்பட்ட ஆதாரங்களை எல்லாம் திரட்டியபிறகும் அரசைக் குறை சொல்வது, அரசியல் ஆதாயத்திற்குத் தானே தவிர, உண்மையான அக்கறையோடு செய்யப்படுவது இல்லை என்று இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**உயர்நீதிமன்றம் அமைத்திருக்கிற சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை முழு வீச்சில் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. வேறு யாரேனும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்தால், அது யாராக இருந்தாலும், எந்தப் பின்னணியைச் சேர்ந்தவராக இருந்தாலும், கடும் நடவடிக்கையை நிச்சயமாக, உறுதியாக நாங்கள் எடுப்போம் என்பதை மீண்டும் ஒரு முறை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24.12.2024 அன்று பிற்பகல் சென்னை மாணவி ஒருவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உடனடியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. உடனடியாக தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மறுநாள் காலையிலேயே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி ஞானசேகரன் காவல் துறையால்

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

## மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விடுபட்ட

# அனைத்து மகளிருக்கும் உரிமைத் தொகை மூன்று மாதங்களுக்குள் வழங்கப்படும்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதியான பதில்!

**சென்னை, ஜன. 9-**

**சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1 கோடியே 14 இலட்சத்து 60 ஆயிரத்து 525 மகளிர் இதுவரை பயனடைந்துள்ளனர் என்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விதிகளை பூர்த்தி செய்யும் மகளிர் அனைவருக்கும் உரிமைத் தொகை மூன்று மாதங்களுக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியுடன் தெரிவித்தார்.**

இதுகுறித்து சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**எஸ்.காந்திராஜன்:** திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மகளிர் எண்ணிக்கையைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்:** பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்கு விண்ணப்பித்த 5 இலட்சத்து 27 ஆயிரம் பேரில் கிட்டத்தட்ட 76 சதவிகிதம் அதாவது, 4 இலட்சத்து 897 மகளிர் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை பெற்று



வருகிறார்கள். குறிப்பாக, அண்ணன் காந்திராஜன் அவர்களுடைய வேடசந்தூர் தொகுதியில் மட்டும் சுமார் 62,000 மகளிர் உரிமைத் தொகை பெற்று வருகிறார்கள் என்பதை இந்த பதில்மூலம் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**எஸ். காந்திராஜன்:** துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ள இந்த விவரங்களுக்கு என்னுடைய மரியாதை கலந்த நன்றியினை முதலிலே நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த சட்டமன்றத்தினுடைய வரலாற்றில் துணை முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு எனக்கு இந்தக் கேள்வியை கேட்பதற்கு வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இதற்கு பதிலளிக்க அனுமதியளித்து, ஒப்புதல் அளித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்து, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையான ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்கிற ஒரு நல்ல சீரிய கொள்கையின் அடிப்படையில் 5 முறை முதலமைச்சராக இருந்து இந்த நாட்டினுடைய ஏழையெளிய மக்களுக்காகவே பாடுபட்ட தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரைத் தாங்கியிருக்கின்ற ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’ என்கிற இந்தத் திட்டத்தில் தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை பேருக்கு இந்தத் தொகை வழங்கப்படுகிறது என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் நான் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் என்பதால், எங்களுடைய குழுவானது பல்வேறு

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

## நியாயவிலைக் கடைகளில் பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகம்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

*சென்னை, ஜன. 9 -*

*பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகத்தை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சைதாப்பேட்டையில் உள்ள நியாயவிலைக் கடையில் இன்று தொடங்கி வைக்கிறார்.*

*பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 2 கோடியே 21 லட்சம் அரிசி அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்போருக்கு ரேஷன் கடைகள் மூலம் தலா ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை, ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.*

*அதனைத்தொடர்ந்து, 250 கோடி ரூபாயை அரசு ஒதுக்கி உள்ளது.*

*பொங்கல் தொகுப்புடன் இலவச வேட்டி, சேலைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*அதன்படி, ரேஷன் கடைகளில் இன்று முதல் பொங்கல் தொகுப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் முன்கூட்டியே டோக்கன் வழங்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், பொங்கல் பரிசுத்தொகுப்பு விநியோகத்தை சைதாப்பேட்டையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தொடங்கி வைக்க உள்ளார்.*

### குடியரசு தினத்தில் டிராக்டர் பேரணி நடத்த முடிவு!

## போராட்டம் நடத்தும் விவசாயிகளை குடியரசுத் தலைவர் சந்திக்க கடிதம்!

### விவசாயிகள் 2வது முறையாக கோரிக்கை!

*புதுடெல்லி, ஜன. 9 -*

*போராட்டம் நடத்தும் விவசாயிகளை சந்திக்க வலியுறுத்தி குடியரசுத் தலைவருக்கு விவசாயிகள் கடிதம் எழுதியுள்ளனர். ஜனவரி 26ம் தேதி குடியரசு தினத்தில் டிராக்டர் பேரணி நடத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.*

*குறைந்த பட்ச ஆதரவு விலை உள்ளிட்ட 13 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஓராண்டாக பஞ்சாப் அரியானா எல்லையில் ஒன்றிய அரசுக்கு எதிராக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.*

*விவசாய சங்கத் தலைவர் ஜக்தீப் சிங் தாலேவால் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் 43வது நாளை எட்டியுள்ளது.*

*அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்தது வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.*

*ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்த முன்வராததால் குடியரசுத் தலைவர் தங்களை சந்திக்க வேண்டும் என்று விவசாயிகள் குடியரசுத் தலைவருக்கு 2வது முறையாக கோரிக்கை கடிதம் அனுப்பி உள்ளனர்.*

*இதனிடையே, குடியரசு தினமான ஜனவரி 26ம் தேதி வட மாநிலங்களில் டிராக்டர் போராட்டம் நடத்தப்பட உள்ளதாக விவசாயிகள் தற்போது அறிவித்துள்ளனர்.*